1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நிறைவேற்றப்படுகின்ற வகையிலே அரசாங்கம் பரிசீலனை செய்து சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் திரு.வி.க. நகரில் 544 வீடுகளும் சர்மா நகரில் 450 வீடுகளும், அதிலே குடியிருப்பவர்களுக்கே சொந்தம் ஆக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கின்றது. அதேபோல தமிழகம் முழுவதும் மதுரை, ராஜபாளையம், சத்தியமூர்த்தி நகர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் திருப்பூர், சிங்காநல்லூர், பீளமேடு ஆகிய எல்லா இடங்களிலும் சேர்ந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 2930 வீடுகள், சிட்கோ நிறுவனத்தின் சார்பில் 1187 வீடுகளும் கட்டப்பட்டவீடுகள் அனைத்தும் அதிலே குடியிருப்பவர்களுக்கே விலைக்கு கொடுப்பது என்று அரசு முடிவு செய்து ஏற்கனவே அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வழங்கப்படும்.

9.35 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகளில் தற்போது யார் எல்லாம் குடியிருக்கிறார்களோ அவர்களுக்கே அவற்றை உரிமையாக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றியதற்காக நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில். இதையே காரனம் காட்டி அங்கேயிருக்கிற அதிகாரிகள் பொது மக்களுக்கு சேரவேண்டிய சாதாரண அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற காரியங்களைக் கூட செய்து தருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அத்தகைய புகார்கள் ஏதும் வரவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த புகார்களின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைத்தல்.

* 1902 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வடக்கன் குளம் ஊராட்சி

பகுதியில் வடக்கன் குளத்தில் ஒரு வாரச் சந்தைத் திறக்க வடக்கன்குள ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஒரு பிரேரணை அனுப்புள்ளார். மேற்படி பொருள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஆய்வில் உள்ளது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கன்குளத்தைச் சுற்றி பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களிலுள்ள விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களையோ, கால்நடை வளர்ப்பவர்கள் தங்களுடைய பொருள்களையோ கொண்டு வந்து விற்பதற்கு பல மைல் செல்வதில் சிரமம் இருக்கிறது. மேலும் அன்றாடம் உற்பத்தி செய்கிற காய்கறிளை பல மைல் தொலைவிற்கு சென்று விற்பதிலும் பல சிரமங்கள் இருக்கின்றன. இச் சிரமங்களைக குறைக்கும் வகையில் மிக விரைவில் அங்கே வாரச் சந்தை வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். காரணம் அப்படி செய்தால் பஞ்சாயத்துகளுக்கு நல்ல வருவாய் வரவாய்ப்பு இருக்கிறது. சந்தை அமைப்பதற்கான இட வசதியும் இருக்கிறது. ஆகவே, இது துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊராட்சியில் சொந்த இடம் இல்லாத காரணத்தால் வாரச் சந்தை அமைப்பதற்கு 3 ஏக்கர் 57 செண்ட் இடம் பெருங்குடி என்ற கிராமத்தில் ஏற்பாடு செய்து, 21 ஆண்டு குத்தகைக்கு ஏற்பாடு செய்து, 100 ரூபாய் குத்தகையாக, மாத வாடகைக் குத்தகையாக 100 ரூபாய் செலுத்தும் வகையில் இதை அமைக்கலாம் என்று முடிவு ஏற்பட்டது. ஆனால் இதை ஊராட்சி பொறுப்பேற்று நடத்துவதா அல்லது ஊராட்சி ஒன்றியம் அந்தச் சந்தையை நிர்வகிப்பதா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டதையொட்டி, பொதுவாகவே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் வாரச்சந்தைகள் துவங்க வேண்டுமானால் மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவுக்கு விடலாமென்று, ஒன்றியத்தின் தீர்மானத்தை ஏற்பது என்று அரசு ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பதால் அது தற்போது ஊராட்சி ஒன்றியக் குழுவிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் அந்தப் பணி தேக்கத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி அதற்கான விவரம் கேட்டால் விரைவில் சந்தையை திறப்பதற்கான முடிவு ஏற்படும்.

நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம்.

* 6503 திரு கே. சுப்பிரமணிய பிள்ளை:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் உள்ள அண்ணா பேருந்து நிலையத்தில் இட நெருக்கடியைப் போக்க அருகிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பணிமனையை பேருந்து நிலையத்தோடு இணைக்க அரசு முன்வருமா?